# பட்டப்படிப்பு கையேடு
## (PROGRAMME GUIDE)

# PG Diploma in இதழியல் மற்றும் வெகுஜன தொடர்பியல் (PGJMC)

School of Journalism and New Media Studies

Indira Gandhi National Open University

Maidan Garhi, New Delhi- 110068

அன்பார்ந்த மாணவர்களே,

இதழியல் மற்றும் தகவல் தொடர்பியல் பிஜி டிப்ளமோ பட்டப்படிப்பிற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். இந்த திட்டத்தில் சேருவதன் மூலம், நீங்கள் உலகின் மிகப்பெரிய மெகா பல்கலைக்கழகங்களில் ஒன்றான இந்திரா காந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக்கழகம் (இக்னோ) மாணவராக இணைந்துள்ளீர்கள்.

இக்னோ, திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி (ODL) முறையில் பல்வேறு கல்வித் திட்டங்களை வழங்கி வருகிறது. தொலைதூர மாணவராக நீங்கள் பெறும் இந்த புதிய கல்வி அனுபவம், உங்கள் அறிவையும் திறனையும் விரிவுபடுத்தும் சிறந்த வாய்ப்பாக அமையும்.

நாங்கள், உங்கள் தொலைதூர ஆசிரியர்களாக இருந்தாலும், கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறைகளில் எப்போதும் உங்களுடன் இணைந்திருக்க முனைவோம். இந்தத் தொடர்பு, கற்றல் வலையமைப்புகள் மற்றும் மாணவர் ஆதரவு சேவைகள் வழியாக தொடர்ந்து வழங்கப்படும்.

முன்னதாக, இந்த பட்டப்படிப்பு கையேட்டை' முழுமையாகப் படித்து, அதை உங்கள் கைவசம் வைத்துக் கொள்ளுங்கள். பாடத்திட்டத்தில் மேலும் முன்னேறும்போது ஏற்படக்கூடிய சந்தேகங்கள் அல்லது விளக்கங்களுக்கு, இந்தக் கையேட்டின் உதவியைப் பயன்படுத்தி பரிசீலிக்கவும். இந்தக் கையேட்டை நன்கு பின்பற்றுவதன் மூலம், பாடத்திட்டம் தொடர்பான உங்கள் செயல்பாடுகளை எளிதாகவும் திறம்படவும் நிர்வகிக்க முடியும்.

உங்கள் கல்விப் பயணத்தின் போது, இக்னோ ஒரு தனித்துவமிக்க மற்றும் புதுமையான திறந்த மற்றும் தொலைதூர கல்வி நிறுவனமாக இருப்பதை நீங்கள் உணர்வீர்கள். பாரம்பரிய நேருக்கு நேர் கல்வி முறைகளைப் பயன்படுத்தும் பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில், இக்னோ எளிதாக்கப்பட்ட பன்மாதிரி ஊடக (மல்டிமீடியா) அணுகுமுறையை பின்பற்றுகிறது.

இக்கட்டமைப்பில், அச்சிடப்பட்ட தன்படிப்பு கல்வி புத்தகங்கள் (SLMs) முக்கியமான பயிற்சி ஊடகங்களாகக் கணிக்கப்படுகின்றன. இவற்றுடன், ஆடியோ மற்றும் வீடியோ நிகழ்ச்சிகள், தொலைநாடாலை (டெலிகான்பரன்சிங்) அமர்வுகள், மற்றும் ஊடாடும் வானொலி ஆலோசனைகள் போன்ற தொகுப்புகளும் இணைக்கப்பட்டுள்ளன.

மேலும், உள்ளூர் கல்வி மையங்கள் ஏற்பாடு செய்யும் நேரடி ஆலோசனை அமர்வுகள் உங்களுக்குப் பயனளிக்கின்றன.

இவ்வாறு, பன்முக ஊடகங்களின் மூலமாக உங்களுடன் தொடர்ச்சியான தொடர்பு ஏற்படுத்தப்படுவதால், உங்கள் கல்வி அனுபவம் மேலும் திறந்ததாக்கப் பெறுகிறது. இது உங்கள் முன்னேற்றத்திற்கான

பாதைகளை எளிமைப்படுத்துவதோடு, சுய கல்வி செயற்பாடுகளை ஊக்குவிக்கின்றது.

இந்தக் கையேடு, பாடத்திட்டத்தின் பல்வேறு கூறுகள் மற்றும் கட்டங்களை நீங்கள் ஒழுங்காகப் புரிந்து கொண்டு, சிறந்த முறையில் செயல்பட உதவுகிறது. இதில், பாடத்திட்டத்தின் நோக்கங்கள், கட்டமைப்பு, செயலாக்க முறை, நிகழ்ச்சி அட்டவணை, ஆலோசனை அமர்வுகள், ஒப்படைப்புகள் மற்றும் மதிப்பீடு போன்ற முக்கியமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கையேட்டைக் கல்விப் பயணத்தின் முழு காலத்திலும் பாதுகாப்பாக வைத்திருப்பது மிகவும் முக்கியம், ஏனெனில் இது உங்கள் ஒவ்வொரு கட்டத்திற்கும் தேவையான தெளிவுகளை வழங்கும்.

வாழ்த்துக்களுடன்,

பேராசிரியர் கே.எஸ்.அருள் செல்வன்,
பட்டபடிப்பு ஒருங்கிணைப்பாளர்
பிஜி டிப்ளமோ இதழியல் மற்றும் தகவல் தொடர்பியல் (தமிழ்)
மின்னஞ்சல்: **ksarul@ignou.ac.in**

# பொருளடக்கம்

1.0 பல்கலைக்கழகம்
2.0 பாடத் திட்டம் பற்றி
    2.1 பாடத்திட்டத்திற்கான காரணம்
    2.2 நோக்கங்கள்
    2.3 இலக்குக் குழுக்கள்
    2.4 தகுதிகள் நிபந்தனைகள்
    2.5 பயிற்று மொழி
    2.6 பாடத்திட்ட காலம்
    2.7 பாடத்திட்ட கட்டணம்
    2.8 பாடத்திட்ட அமைப்பு
    2.9 பாடத்திட்டம் வழங்குதல்
    2.10 Credit அமைப்பு
3.0 பாடத்திட்ட அமைப்பு
4.0 கற்பித்தல் முறை
    4.1 தன்படிப்பு கல்வி புத்தகங்கள்
    4.2 ஆடியோ மற்றும் வீடியோ பொருட்கள்
    4.3 தொலைத்தொடர்பு
    4.4 ஞான தரிசனமும் ஞான வாணியும்
    4.5 ஊடாடும் வானொலி ஆலோசனை
    4.6 அறிவு ஸ்ட்ரீம்
    4.7 e-Gyankosh
    4.8 ஸ்வயம் பிரபா
    4.9 ஆலோசனை அமர்வுகள்
    4.10 கல்வி மையங்கள்
5.0 மதிப்பீடு
    5.1 பணிகள்
    5.2 பருவ இறுதித் தேர்வு
6.0 மற்ற பயனுள்ள தகவல்கள்
    6.1 இட ஒதுக்கீடு

6.2 கல்வி உதவித் தொகைகள்

6.3 மாணவர் போர்ட்டலில் உங்கள் கணக்கு

6.4 முகவரி / கல்வி மையம் / மண்டல மையத்தை மாற்றுதல் அல்லது திருத்துதல்

6.5 சில பயனுள்ள குறிப்புகள்

6.6 உங்கள் பயன்பாட்டிற்கான சில அத்தியாவசிய படிவங்கள்

6.7 எதற்காக யாரை தொடர்பு கொள்வது?

6.8 PGJMC Programme க்காக செயல்படுத்தப்பட்ட RC கள் மற்றும் LSC களின் பட்டியல்

## 1.0 பல்கலைக்கழகம்

கல்வியை ஜனநாயகப்படுத்தும் நோக்கில், இந்திரா காந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக்கழகம் (இக்னோ) செப்டம்பர் 1985-இல் நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இதன் மூலம், இது மக்கள்தொகையின் பெரும்பான்மையை அடையும் வகையில் கல்வியை வழங்கி வருகிறது. இதன் கல்விச் செயல்பாடுகள் பல்வேறு தொழில்கள் மற்றும் உத்தியோகத் துறைகளை உள்ளடக்கியவையாகும். இவ்வமைப்பின் முக்கிய அம்சங்கள் புதுமை, நெகிழ்வுத்தன்மை மற்றும் மலிவான செலவில் தரமான கல்வி என்பவையாகும். எனவே, இக்கல்லூரி ஒரு தனித்துவமிக்க பல்கலைக்கழகமாகக் கருதப்படுகிறது.

பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள்:

- சமூகத்தின் கல்வி மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல்.
- தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு கல்வியை நேரடியாக வீட்டுவாசலுக்கே கொண்டு சென்று, அவர்களது திறன்கள் மற்றும் திறமைகளை வளர்த்திடும் எளிதான அணுகலை வழங்குதல், இதன்மூலம் உயர் கல்வியின் ஜனநாயகமாக்கலை ஏற்படுத்துதல்.
- புதுமையான பல்லூடக கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகள் மூலம் அறிவும் கல்வியும் பரவுவதற்கு வழிவகுத்தல்.
- அனைத்து கல்வி மட்டங்களிலும் தரமான உயர்கல்வியை வழங்குதல்.
- நாடு முழுவதிலும் தொலைதூரக் கல்வி மற்றும் திறந்தவெளி பல்கலைக்கழக முறைகளை ஒருங்கிணைத்து, கல்வித்தரத்தை நிலைநிறுத்துதல்.

இக்னோ பல்வேறு கல்வித் திட்டங்களை வழங்குகிறது; இதில் சான்றிதழ்கள், டிப்ளமாக்கள் மற்றும் பட்டங்களும் அடங்கும். திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி முறைகளின் மூலம், இது பாடப்பிரிவுகளை வடிவமைத்து வழங்குகிறது. இக்னோ பல்கலைக்கழகம் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் விரிவாக்கப் பாடப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. மேலும், இது பிற திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி நிறுவனங்களுக்கு நிபுணத்துவ சேவைகளையும் வழங்குகிறது.

தொலைதூரக் கல்வி முறையின் முக்கிய அம்சங்கள்:

- உங்கள் சொந்த வேகத்திலும் வசதிக்கேற்ற நேரத்திலும் படிக்க முடியும்.
- நீங்கள் விரும்பும் இடத்தில் இருந்து கல்வி பெற முடியும்.
- பரந்த துறைகள் மற்றும் பாடப்பிரிவுகளில், விருப்பமுள்ள பாடநெறிகளையும் கலவையையும் தேர்ந்தெடுக்க நெகிழ்வுத்தன்மை வழங்கப்படுகிறது.
- நவீன மற்றும் பொருத்தமான கல்வி மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பல்கலைக்கழகம், தொலைதூர மற்றும் தொடர்ச்சிக் கல்வி முறைகளின் வாயிலாக மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்ற முயற்சிக்கின்றது. இது, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செயல்படுகின்றது. சமகால தேவைகளுக்கு ஏற்ப உயர்தரக் கல்வியை வழங்கும் நோக்கில், சமீபத்திய அறிவியல் புரிதலை அதிகரிக்கவும், புதிய கல்வி தொழில்நுட்பங்களை முழுமையாக பயன்படுத்தவும் செயற்படுகின்றது.

## 2.0 பாடத்திட்டம் பற்றி

இந்த பிஜி டிப்ளமோ பட்டப்படிப்பு, இதழியல் மற்றும் வெகுஜனத் தொடர்பு தொடர்பான பல்வேறு அம்சங்களை விரிவாக விவரிக்கின்றது. இது தேவையான அறிவு, தொழில்முறைத் திறன்கள், அணுகுமுறைகள் மற்றும் மனப்பாங்குகளுடன் மாணவர்களைத் தயாரிக்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களை மாற்றம் மற்றும் சமூக வளர்ச்சிக்கான சக்திவாய்ந்த கருவியாகப் புரிந்து கொள்வதன் மூலம், ஊடகம் மற்றும் தகவல் தொடர்பு துறைகளில் திறமையான மனிதவளத்தை உருவாக்குவதே இந்த பாடத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

பல்வேறு ஊடகத் துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும், தொழில்முறைத் திறன்களை மேம்படுத்துவதற்கும் இந்த பாடத்திட்டம் பயனளிக்கின்றது. குறிப்பாக, முறையான பயிற்சி இல்லாமல் ஊடகத் துறையில் பணியாற்றுபவர்கள் தங்கள் அறிவும், திறன்களும் மேம்பட இந்த பட்டப்படிப்பு ஒரு சிறந்த வாய்ப்பாக அமைகின்றது.

## 2.1 பாடத்திட்டத்திற்கான காரணம்

கடந்த சில தசாப்தங்களில், இந்திய ஊடகங்கள் அதிவேக வளர்ச்சியைக் கண்டுள்ளன. பல்வேறு இந்திய மொழிகளில் வெளியாகும் பத்திரிகைகள், விற்பனையும் வாசகர்களின் எண்ணிக்கையும் கூடவே, தொடர்ந்து செழித்து வளர்ந்து வருகின்றன. வானொலி, முக்கியமான மறுமலர்ச்சியைப் பெற்றுள்ளது. சமீபத்திய காலகட்டத்தில் தொலைக்காட்சியின் விரிவாக்கம் சாதாரணமான ஒன்றல்ல – அது நிகரற்றதாகும்.

மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரத் துறைகள் தொடர்ந்து வளர்ச்சியடைந்துவரும் நிலையில், இணையம் மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் தகவல் பரப்புவதை எளிதாகவும் விரைவாகவும் மாற்றியமைத்துள்ளன. எழுத்தறிவு விகிதம் உயர்ந்திருப்பதும், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி பெருகியிருப்பதும் தகவல் துறையின் அதிவேக வளர்ச்சிக்கு முக்கிய உந்துதல்களாக அமைந்துள்ளன.

இதழியல் மற்றும் மக்கள் தொடர்புத் துறைகளில் பயிற்சி பெற்ற ஊடக வல்லுநர்களுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இத்தகைய தேவைகளை பூர்த்தி செய்ய, தத்துவார்த்தக் கூர்மையும் நடைமுறைச் செயல்திறனும் ஒருங்கிணைந்ததாக அமைந்த ஓடிஎல் (ODL) முறையில் பத்திரிகை மற்றும் மக்கள் தொடர்பு பாடப்பிரிவில் முதுகலைப் பட்டப்படிப்பு வழங்கும் திணிவான தேவை ஏற்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்து வரும் ஊடகத் துறைகளில் நுட்பமாக பயிற்சி பெற்ற மனிதவளத்தை உருவாக்குவதும், தொலைதூர மற்றும் கிராமப்புறச் சமூகங்களை அடைவதன் மூலம் உயர்கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சியில் காணப்படும் இடைவெளிகளை குறைப்பதும் இந்தத் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

பரந்த மண்டல மற்றும் கல்வி மைய வலையமைப்பையும், தரமான மற்றும் முழுமையான கல்வி புத்தகங்களை உருவாக்கும் திறனையும் கொண்ட இக்னோ, கல்விக்கான இடைவெளியைக் குறைக்கும் முயற்சியிலும், பிற நிறுவனங்களுடன் கூட்டு ஏற்பாடுகள் மூலம் நடைமுறைப் பயிற்சிகளை வழங்குவதிலும் தனித்துவம் வாய்ந்ததாக திகழ்கிறது.

## 2.2 நோக்கங்கள்

பாடத்திட்டத்தை முடித்த பிறகு, நீங்கள் பின்வரும் அறிவும் திறன்களும் பெற்றிருப்பீர்கள்:

- அச்சு, ஒலிபரப்பு மற்றும் டிஜிட்டல் ஊடகங்களுக்கு நிகழ்ச்சிகளை அறிக்கையிடுதல், திருத்துதல், வழங்குதல் மற்றும் தயாரித்தல்;
- மின்னணு மற்றும் டிஜிட்டல் ஊடகத் துறைகளில் பணியாற்றும் திறன்;
- வளர்ச்சி ஊடகத் துறைகளில் வேலை செய்யும் தகுதி;
- விளம்பரம், மக்கள் தொடர்பு மற்றும் பெருநிறுவன தகவல் தொடர்பு துறைகளில் இணையும் திறன்.

## 2.3 இலக்குக் குழுக்கள்

அச்சு ஊடகம், வானொலி, தொலைக்காட்சி, புதிய ஊடகம், விளம்பரம், மக்கள் தொடர்பு, ஊடக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஊடகத் துறைகளில் முழுநேர தொழில்வாழ்க்கையை உருவாக்க விரும்பும் மாணவர்களுக்கு இந்த நிகழ்ச்சி பயனளிக்கக்கூடியதாகும். இத்துறைகளில் ஏற்கனவே பணியாற்றிவரும் நபர்களும் தங்கள் திறன்கள் மற்றும் அறிவைப் பராமரித்து மேம்படுத்த விரும்பினால், அவர்களுக்கும் இது சமமாக ஏற்றதாகும்.

இந்த பாடத்திட்டம் பின்வரும் இலக்குக் குழுக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது:

- அச்சு, டிஜிட்டல் மற்றும் மின்னணு ஊடகங்களில் தொழில்நுட்ப அனுபவம் பெற விரும்புவோர்
- விளம்பரம் மற்றும் மக்கள் தொடர்புத் துறைகளில் தங்களை நிலைநிறுத்த விரும்புவோர்
- ஊடக ஆராய்ச்சி மற்றும் கல்வித்துறைகளில் ஆர்வமுள்ளோர்
- வளர்ச்சி ஊடகத் துறையில் தொழில்வாய்ப்புகளை ஆராய விரும்புவோர்
- ஏற்கனவே ஊடக நிறுவனங்களில் பணியாற்றி, தங்கள் நடைமுறை மற்றும் கோட்பாட்டு அறிவை விரிவுபடுத்த விரும்பும் ஊடகவியலாளர்கள்
- ஊடகத் தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ள ஆர்வமுள்ளோர்

## 2.4 தகுதிகள் மற்றும் நிபந்தனைகள்

மாணவர்கள் ஏதேனும் ஒரு துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும், கணினி, இணையம் மற்றும் எம்.எஸ். வேர்டின் அடிப்படைத் திறன்கள் அவசியமாக இருக்க வேண்டும்.

## 2.5 பயிற்று மொழி

இந்த நிகழ்ச்சி இந்தி, தமிழ் மற்றும் ஆங்கில வழிகளில் வழங்கப்படுகிறது.

## 2.6 பாடத்திட்ட காலம்

பாடத்திட்டத்தின் குறைந்தபட்ச காலம் 1 ஆண்டுகள். அதிகபட்சமாக 3 ஆண்டுகளில் முடிக்க முடியும்.

**2.7** பாடத்திட்ட கட்டணம்

பல்கலைக்கழகம் அவ்வப்போது கட்டணத்தை மாற்றியமைக்கிறது. இக்னோ வலைத்தளம் www.ignou.ac.in ஐப் பார்க்கவும்.

**2.8** பாடத்திட்ட வடிவமைப்பு

PGJMC பாடத்திட்டத்தின் கீழ், மொத்தம் 40 கிரெடிட்கள் பெற வேண்டிய கட்டாயம் உள்ளது.

**2.9** பாடத்திட்டம் வழங்குதல்

பல்வேறு கற்றல் தேவைகளுக்கு ஏற்ப அதிக விருப்பங்களை வழங்கும் நோக்குடன், இந்தத் பாடத்திட்டம் பல்வேறு விநியோக ஊடகங்களை ஆதாரமாக கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இதில் டிஜிட்டல் மற்றும் அச்சிடப்பட்ட சுயக் கற்றல் உபகரணங்கள் (SLM) முக்கியத்துவம் பெறுகின்றன. கூடுதலாக, வானொலி, தொலைக்காட்சி, தொலைக் கலந்துரையாடல், வானொலி கலந்தாய்வு போன்ற பல்வேறு ஊடகத் தொழில்நுட்பங்கள் ஒருங்கிணைந்த கற்றல் தொகுப்பாக பயன்படுகின்றன.

**2.10 Credit System**

இக்னோ அதன் கல்வித் திட்டங்களில் கிரெடிட் முறையை பின்பற்றுகிறது. ஒவ்வொரு கிரெடிடும் சுமார் 30 மணிநேரங்கள் கொண்ட கற்றல் நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். இதில் படிப்பு, பாடப்பணிகள், ஆடியோ மற்றும் வீடியோச் சொற்பொழிவுகளை கேட்பது/பார்ப்பது போன்ற பல்வேறு செயல்பாடுகள் அடங்கும். எனவே, 4 கிரெடிட் கொண்ட ஒரு பாடம் மொத்தமாக 120 மணிநேர கற்றலைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் உரிய கிரெடிட்களின் எண்ணிக்கையை அறிந்து கொள்வது, அந்த பாடத்திட்டத்தை வெற்றிகரமாக முடிக்கத் தேவையான கற்றல் முயற்சியின் அளவைப் புரிந்துகொள்ள உதவுகிறது. PGJMC கல்வித் திட்டம் மொத்தம் 40 கிரெடிட்கள் கொண்டதாகும்.

## 3.0 பாடத்திட்ட அமைப்பு

பிஜி டிப்ளமோ ஜர்னலிசம் அண்ட் மாஸ் கம்யூனிகேஷன் (PGJMC) பாடத்திட்ட கட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| S.No. | பாட குறியீடு | பாடநெறி தலைப்பு | Credits |
|---|---|---|---|
| 1 | MJM-120 | இதழியல் மற்றும் வெகுஜன தகவல்தொடர்பு அறிமுகம் | 6 |
| 2 | MJM-021 | செய்தி சேகரிப்பு நுட்பங்கள் | 4 |
| 3 | MJM-022 | பத்திரிகைக்காக எழுதுதல் மற்றும் திருத்துதல் | 4 |
| 4 | MJM-023 | ஒளிபரப்பு மற்றும் ஆன்லைன் இதழியல் | 4 |
| 5 | MJM-124 | ஊடகங்கள் மற்றும் சமூகம் | 6 |
| 6 | MJM-025 | ஊடக நெறிமுறைகள் மற்றும் சட்டங்கள் | 4 |
| 7 & 8 | Choose **any two:**<br>1. MJML-220 Practical: அச்சிடு*<br>2. MJML-221 Practical: ஆடியோவிஷுவல்*<br>3. MJML-023 Practical : டிஜிட்டல் மீடியா* | | 6 + 6 = 12 |
| | **Total Credits** | | **40 Credits** |

ஒவ்வொரு பாடத்தின் விரிவான உள்ளடக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

## MJM-020 இதழியல் மற்றும் வெகுஜன தகவல்தொடர்பு அறிமுகம்

பாடத்தொகுதி **1:** தகவல்தொடர்பு அறிமுகம்

பாடப்பிரிவு 1: தகவல்தொடர்பால்: கருத்து மற்றும் செயல்முறை

பாடப்பிரிவு 2: தகவல் தொடர்பாடல் மாதிரிகள்

பாடப்பிரிவு 3: வெகுஜன தகவல்தொடர்பால் கோட்பாடுகள்

பாடப்பிரிவு 4: வெகுஜன தொடர்பால் ஆராய்ச்சி: கோட்பாடுகள் மற்றும் செயல்முறை

பாடத்தொகுதி **2:** வெகுஜன ஊடகங்களின் பரிணாமம்

பாடப்பிரிவு 5: இந்தியா மற்றும் வெகுஜன தகவல்தொடர்பு வரலாறு

பாடப்பிரிவு 6: இந்தியாவில் அச்சு ஊடகம்

பாடப்பிரிவு 7: இந்தியாவில் மொழி இதழியல்

பாடப்பிரிவு 8: வானொலியின் வளர்ச்சி

பாடப்பிரிவு 9: தொலைக்காட்சியின் வளர்ச்சி

பாடப்பிரிவு 10: டிஜிட்டல் ஊடகங்களின் தோற்றம்

பாடத்தொகுதி **3:** வெகுஜன ஊடகம் உரிமையாளர் மற்றும் நிறுவன கட்டமைப்புகள்

பாடப்பிரிவு 11: ஊடக உரிமை முறைகள் (வெகுஜன ஊடகம்)

பாடப்பிரிவு 12: செய்தி நிறுவனங்கள் மற்றும் சிறப்பு கட்டுரைகள்

பாடப்பிரிவு 13: அரசு ஊடக நிறுவனங்கள்

பாடப்பிரிவு 14: கல்வி ஊடகம்

பாடப்பிரிவு 15: இந்தியத் திரைப்படத் துறை

பாடத்தொகுதி **4:** ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் தொடர்பாடல்

பாடப்பிரிவு 16: விளம்பரம் செயதல்

பாடப்பிரிவு 17: மக்கள் தொடர்பு மற்றும் பெருநிறுவனத் தொடர்பாடல்

பாடப்பிரிவு 18: நிகழ்ச்சி மேலாண்மை

பாடப்பிரிவு 19: ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் தொடர்பாடல்

## MJM-021 செய்தி சேகரிப்பு நுட்பங்கள்

### பாடத்தொகுதி 1: செய்தி கருத்துகள்

பாடப்பிரிவு 1: செய்திகள்: வரையறைகள், கருத்துக்கள் மற்றும் கோட்பாடுகள்

பாடப்பிரிவு 2: செய்தி ஆதாரங்கள்

பாடப்பிரிவு 3: செய்தி அமை அமைப்பு மற்றும் செயல்பாடுகள்: பத்திரிகை மற்றும் ஆன்லைன் மீடியா

பாடப்பிரிவு 4: செய்தி அமை அமைப்பு மற்றும் செயல்பாடுகள்: மின்னணு ஊடகங்கள்

### பாடத்தொகுதி 2: செய்தி சேகரிப்பு நுட்பங்கள்

பாடப்பிரிவு 5: செய்தி அறிக்கையிடுதலின் வகைகள்

பாடப்பிரிவு 6: இதழில் எழுத்துகளுக்கான ஆராய்ச்சி

பாடப்பிரிவு 7: நேர்காணல்கள்: கருவிகள் மற்றும் நுட்பங்கள்

பாடப்பிரிவு 8: தரவு இதழியலை அறிந்துகொள்ளுதல்

### பாடத்தொகுதி 3: பீட் ரிப்போர்ட்டிங் - I

பாடப்பிரிவு 9: அரசியல் செய்தி அறிக்கையிடல்

பாடப்பிரிவு 10: குற்ற செய்தி அறிக்கையிடல்

பாடப்பிரிவு 11: விளையாட்டு செய்தி அறிக்கையிடல்

பாடப்பிரிவு 12: சட்ட செய்தி அறிக்கையிடல்

### பாடத்தொகுதி 4: பீட் ரிப்போர்ட்டிங் - II

பாடப்பிரிவு 13: குடிமைச் செய்தி அறிக்கையிடல்

பாடப்பிரிவு 14: சமூக பிரச்சனைகளை செய்தி அறிக்கையிடல்

பாடப்பிரிவு 15: சுகாதாரம் மற்றும் கல்விச் செய்தி அறிக்கையிடல்

பாடப்பிரிவு 16: வாழ்க்கை முறை, ஃபேஷன் மற்றும் திரைப்படங்களை செய்தி அறிக்கையிடல்

## MJM-022 பத்திரிகைக்காக எழுதுதல் மற்றும் திருத்துதல்

### பாடத்தொகுதி **1:** அச்சு ஊடகத்திற்கு எழுதும் திறன்

பாடப்பிரிவு 1: எழுத்தின் அடிப்படைகள்

பாடப்பிரிவு 2: திரும்பட எழுதுதல்

பாடப்பிரிவு 3: அச்சு ஊடகத்திற்காக எழுதுதல்

பாடப்பிரிவு 4: மொழிபெயர்ப்பு

### பாடத்தொகுதி **2:** பகுப்பாய்வு எழுத்து

பாடப்பிரிவு 5: நெகிழ்வுரை எழுதுதல்

பாடப்பிரிவு 6: கருத்துக்களை எழுதுதல்

பாடப்பிரிவு 7: தலையங்கம் எழுதுதல்

பாடப்பிரிவு 8: இதழுகளுக்கு எழுதுதல்

### பாடத்தொகுதி **3:** செம்மையாக்குதல்

பாடப்பிரிவு 9: செய்தி தலைப்பு மற்றும் முகப்புரை எழுதுதல்

பாடப்பிரிவு 10: செம்மையாக்க விதிகள்

பாடப்பிரிவு 11: புகைப்பட இதழியல்

### பாடத்தொகுதி **4:** பக்க வடிவமைப்பு - டிசைனிங்

பாடப்பிரிவு 12: பக்க வடிவமைப்பு

பாடப்பிரிவு 13: பக்க வடிவமைப்பு விதிகள்

பாடப்பிரிவு 14: அச்சுக்கலை & உருவம்

பாடப்பிரிவு 15: தகவல் வரைபடம்

## MJM-023 ஒளிபரப்பு மற்றும் ஆன்லைன் இதழியல்

### பாடத்தொகுதி **1:** வானொலி இதழியல்

பாடப்பிரிவு 1: வானொலி: ஒரு ஒலி ஊடகம்

பாடப்பிரிவு 2: வானொலிக்கான எழுத்துமுறைகள்

பாடப்பிரிவு 3: வானொலி செய்தி சேகரிப்பு செயல்முறை

பாடப்பிரிவு 4: செய்தி தயாரிப்பு

பாடப்பிரிவு 5: செய்தி வழங்கும் நுட்பங்கள்

### பாடத்தொகுதி **2:** தொலைக்காட்சி இதழியல்

பாடப்பிரிவு 6: தொலைக்காட்சி: ஒரு ஒலி-ஒளி ஊடகம்

பாடப்பிரிவு 7: தொலைக்காட்சிக்கான எழுத்துமுறைகள்

பாடப்பிரிவு 8: தொலைக்காட்சி செய்திகள்

பாடப்பிரிவு 9: தொலைக்காட்சிக்கான நிகழ்ச்சி தயாரிப்பு

பாடப்பிரிவு 10: தொலைக்காட்சி செய்தி வழங்கும் நுட்பங்கள்

### பாடத்தொகுதி **3:** ஆன்லைன் இதழியல்

பாடப்பிரிவு 11: ஆன்லைன் இதழியலின் அடிப்படைக்கூறுகள்

பாடப்பிரிவு 12: ஆன்லைன் ஊடகத்திற்காக எழுதுதல்

பாடப்பிரிவு 13: ஆன்லைன் செய்தி அமை அமைப்பு

பாடப்பிரிவு 14: ஆன்லைன் செய்தி தயாரிக்கும் நுட்பங்கள்

பாடப்பிரிவு 15: செய்தி இணையதளத் தயாரிப்பு முறைகள்

## MJM-024 ஊடகங்கள் மற்றும் சமூகம்

### பாடத்தொகுதி **1:** வெகுஜன ஊடகம் மற்றும் சமூகம்

பாடப்பிரிவு 1: ஊடகம் மற்றும் சமூகம் பற்றிய ஒரு புரிதல்

பாடப்பிரிவு 2: ஊடகப் பார்வையாளர்கள்

பாடப்பிரிவு 3: ஊடக கல்வியறிவு

பாடப்பிரிவு 4: வெகுஜன ஊடகக் கொள்கைகள்

### பாடத்தொகுதி **2:** ஊடகமும் வளர்ச்சியும்

பாடப்பிரிவு 5: வளர்ச்சி: கருத்தும் மற்றும் கோட்பாடுகள்

பாடப்பிரிவு 6: வளர்ச்சி தொடர்பாடல்

பாடப்பிரிவு 7: சமூக மற்றும் நடத்தை  மாற்றம் தொடர்பு

பாடப்பிரிவு 8: SBCC: வழக்கு ஆய்வுகள்

### பாடத்தொகுதி **3:** ஊடகம் மற்றும் சமகாலப் பிரச்சினைகள் **- I**

பாடப்பிரிவு 9: ஊடங்கள் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள்

பாடப்பிரிவு 10: கல்வி மற்றும் ஊடங்கள்

பாடப்பிரிவு 11: பாலினம் மற்றும் ஊடங்கள்

பாடப்பிரிவு 12: சுழற்சி சூழல் மற்றும் ஊடங்கள்

பாடப்பிரிவு 13: ஊடங்கள் மற்றும் மனித உரிமைகள்

### பாடத்தொகுதி **4:** ஊடங்கள் மற்றும் சமகாலப் பிரச்சினைகள் **- II**

பாடப்பிரிவு 14: சர்வதேச மற்றும் கலாச்சாரங்குகளுக்கு இலக்கியமான தொடர்பாடல்

பாடப்பிரிவு 15: தொழில்நுட்பப் புரட்சி

பாடப்பிரிவு 16: உலகமயமாக்கல் மற்றும் ஊடங்கள்

பாடப்பிரிவு 17: மாற்று ஊடங்கள்

## MJM-025 ஊடக நெறிமுறைகள் மற்றும் சட்டங்கள்

**பாடத்தொகுதி 1: ஊடக நெறிமுறைகள்**

பாடப்பிரிவு 1: ஊடக அறநெறிக் கோட்பாடுகள்

பாடப்பிரிவு 2: செய்தி ஊடகம் மற்றும் நெறிமுறை அக்கறைகள்

பாடப்பிரிவு 3: ஊடக நெறிமுறைகள் மற்றும் சுய ஒழுங்குமுறை

பாடப்பிரிவு 4: புதிய ஊடக நெறிமுறைகள்

**பாடத்தொகுதி 2: ஊடகச் சட்டங்கள்**

பாடப்பிரிவு 5: இந்திய அரசியலமைப்பு

பாடப்பிரிவு 6: ஊடகச் சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பு

பாடப்பிரிவு 7: ஊடகச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பு

பாடப்பிரிவு 8: ஊடகச் சட்டத்தில் முன்முயற்சிகள்

**பாடத்தொகுதி 3: தகவல் தொடர்பான சட்டங்கள்**

பாடப்பிரிவு 9: அறிவசார் சொத்துரிமைகள்

பாடப்பிரிவு 10: பதிப்புரிமைச் சட்டம்

பாடப்பிரிவு 11: இணையதளச் சட்டம்

பாடப்பிரிவு 12: தகவல் அறியும் உரிமை

**பாடத்தொகுதி 4: விளம்பரம் & மக்கள் தொடர்பு நெறிமுறைகள் மற்றும் சட்டங்கள்**

பாடப்பிரிவு 13: விளம்பர நெறிமுறைகள் மற்றும் சட்டங்கள்

பாடப்பிரிவு 14: மக்கள் தொடர்பு நெறிமுறைகள் மற்றும் சட்டங்கள்

பாடப்பிரிவு 15: நிகிழ்வு ஆய்வுகள்

**ஆண்டு-II**

**MJML-220: Practical அச்சு ஊடகம்**

இந்த பாடத்திட்டத்தின் விரிவான தகவலுக்கு MJML-220 இன் நடைமுறை கையேட்டை நீங்கள் பார்க்கலாம்.செய்முறை கையேடு ***eGyankosh*** இல் டிஜிட்டல் வடிவத்தில் மட்டுமே கிடைக்கிறது.

**MJML-221: Practical ஆடியோவிஷுவல்**

நீங்கள் பார்க்கலாம் நடைமுறை கையேட்டில் MJML-221 இந்த பாடத்திட்டம் பற்றிய விரிவான தகவலுக்கு.செய்முறை கையேடு ***eGyankosh*** இல் டிஜிட்டல் வடிவத்தில் மட்டுமே கிடைக்கிறது.

**MJML-023: Practical டிஜிட்டல் மீடியா**

நீங்கள் பார்க்கலாம் நடைமுறை கையேட்டில் MJML-023 இந்த பாடத்திட்டம் பற்றிய விரிவான தகவலுக்கு.செய்முறை கையேடு ***eGyankosh*** இல் டிஜிட்டல் வடிவத்தில் மட்டுமே கிடைக்கிறது.

## 4.0 கற்பித்தல் முறை

இந்தப் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கும் முறை, வழக்கமான பல்கலைக்கழகங்களில் காணப்படும் முறையிலிருந்து வேறுபட்டதாகும். திறந்தவெளிப் பல்கலைக்கழக முறைமை, கற்பித்தல்-கற்றல் செயல்பாட்டில் மாணவர் ஒரு செயற்பாட்டு பங்குதாரராக (active participant) இருக்கின்றார்.

பல்கலைக்கழகம், அறிவுறுத்தலுக்கான பல ஊடக அணுகுமுறையை (multi-media approach) பின்பற்றுகிறது. இவ்வணுகுமுறை பின்வரும் கூறுகளை உள்ளடக்கியது:

- சுயகற்றல் நோக்கில் தயாரிக்கப்பட்ட டிஜிட்டல் / அச்சிடப்பட்ட புத்தகங்கள்
- ஆடியோ மற்றும் வீடியோ கல்விப் நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சி வழிக் கற்றல் (டெலிகான்பரன்சிங்)
- ஞான்தர்ஷன் மற்றும் ஞானவாணி - கல்வி நிலையங்கள்
- இருவழி தொடர்பு வானொலி வழி ஆலோசனை கலந்தாய்வுகள்
- நேரடி ஆலோசனை கலந்தாய்வுகள்
- மாணவர்களுக்கான உள்ளூர் கல்வி மையங்கள்

### 4.1 சுயகற்றல் நோக்கில் தயாரிக்கப்பட்ட டிஜிட்டல் / அச்சிடப்பட்ட புத்தகங்கள்

டிஜிட்டல்/அச்சிடப்பட்ட புத்தகங்கள் இந்த பாடத்திட்டத்திற்கான முக்கிய பாடப் பொருட்களாகும். இது பாடங்கள் மற்றும் பாடத்தொகுதிகள் வடிவில் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியும் 4-5 பாடப்பிரிவுகளைக் கொண்டுள்ளது. பாடப்பிரிவு ஒரு குறிப்பிட்ட விஷசயம் பற்றிய பாடம் என்று நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

பாடப்பிரிவுகளை எவ்வாறு படிப்பது?

பாடத்திட்டத்தை நீங்கள் பார்வையிடும் போது, ஒவ்வொரு பாடமும் நான்கு தனித்தனி பாடத்தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதை காணலாம். ஒவ்வொரு பாடத்தொகுதியிலும் பல பாடப்பிரிவுகள் இடம் பெறுகின்றன. இவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன.

ஒவ்வொரு பாடப்பிரிவும் ஒரு அறிமுகத்துடன் தொடங்குகிறது. இதில், அந்த பாடப்பிரிவு பற்றிய முன்னுரையை வழங்குகிறோம். அதற்குப்

பின்னர், பாடப்பிரிவை படித்து முடிக்கும்போது நீங்கள் அடையவேண்டிய கல்வி நோக்கங்கள் பட்டியலிடப்படுகின்றன.

பாடப்பிரிவின் உள்ளடக்கம் அதன் முக்கிய அம்சங்களைப் பொருத்து பிரிவுகள் மற்றும் துணைப் பிரிவுகளாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடப்பிரிவின் முடிவிலும், அந்தப் பகுதிக்கான முக்கிய அம்சங்களை சுருக்கமாக மீள்பார்வை செய்யப்படும்.

முன்னேற்றத்தைக் கண்காணிக்க உதவுவதற்காக, ஒவ்வொரு பாடப்பிரிவிலும் சில இடங்களில் 'உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்' என்ற தலைப்பின் கீழ் சுயமதிப்பீட்டு பயிற்சிகள் (Self-check Exercises) வழங்கப்பட்டுள்ளன. இவற்றுடன் சாத்தியமான விடைகளும் (probable answers) சேர்க்கப்பட்டுள்ளன.

பாடப்பிரிவை நீங்கள் படிக்கும்போது, மார்ஜினில் (மூல உரையில் வலது அல்லது இடது விளிம்பில்) கொடுக்கப்பட்ட இடங்களில் முக்கியமான குறிப்புகளை எழுதி வைக்கலாம். இதற்காக பாடத்தொகுதியில் பரந்த விளிம்பு இடங்கள் உங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய நடைமுறைகள், நீங்கள் படித்ததை ஒருங்கிணைக்கவும், தங்களின் புரிதலைத் தானாகவே மதிப்பீடு செய்யவும், பாடப்பணி கேள்விகளுக்கு பதிலளிக்கவும் மற்றும் தெளிவில்லாத பகுதிகளை அடையாளம் காணவும் உதவுகின்றன.

### 4.2 ஆடியோ-வீடியோ நிகழ்ச்சிகள்

டிஜிட்டல் மற்றும் அச்சிட்ட புத்தகங்களைத் தொடர்ந்து, ஒலி மற்றும் ஒளி நிகழ்ச்சிகளும் ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் தயாரிக்கப்படுகின்றன. இவை பாடப்பிரிவுகளை ஆழமாகப் புரிந்து கொள்ள உதவுகின்றன. கியான்தர்ஷன் தொலைக்காட்சியின் மூலம் வீடியோ நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன; ஒளிபரப்பு அட்டவணையை இக்னோ பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் காணலாம்.

மேலும், உள்ளூர் கல்வி மையங்களில் ஒலி-ஒளி சாதனங்கள் கிடைக்கின்றன, ஆலோசனைக் கலந்தாய்வுகளின் போது இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும் வாய்ப்பும் உங்களுக்குக் கிடைக்கும்.

### 4.3 தொலைத்தொடர்பு கலந்தாய்வுகள்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மாணவர்களைச் சென்றடைய, டெல்லியிலிருந்து ஒருவழி வீடியோ மற்றும் இருவழி ஒலி வசதியைப் பயன்படுத்தி, செயற்கைக்கோள் ஊடாக டெலிகான்பரன்சிங் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன.

மாணவர்கள், வல்லுநர்கள் மற்றும் பாடத்திட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள் இடையே தகவல்களைப் பகிர்ந்து கொள்ள, தொலைதூர கலந்துரையாடல் சிறந்த வழிமுறையாக அமைகிறது.

தலைமையகத்தில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் துறையில் உள்ள பிற வல்லுநர்கள் அல்லது புகழ்பெற்ற அறிஞர்களுடன் நேரடியாக கலந்துரையாடும் சுவாரஸ்யமான வாய்ப்பை இது வழங்குகிறது.

இணையதளத்தின் மூலமாகவும் இந்த அமர்வுகளில் நீங்கள் கலந்து கொள்ளலாம். உங்கள் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளை, தொலைபேசி வாயிலாக நிபுணர்களிடம் நேரடியாக வைக்கலாம்.

### 4.4 ஞான்தர்ஷன் மற்றும் ஞான்வாணி நிலையங்கள்

நாட்டின் பிரத்யேக கல்வி தொலைக்காட்சி சேனலான ஞான்தர்ஷன், 24 மணி நேரமும் பல்வேறு தலைப்புகளில் கல்வி நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. இந்த சேனல் வழங்கும் தகவல்பூர்வமான நிகழ்ச்சிகளை நீங்கள் காண விரும்பினால், அவை டி.டி.எச். தளங்கள் மற்றும் கேபிள் டிவி நெட்வொர்க்குகள் வழியாக பெறலாம். ஞான்தர்ஷன் இணையதள முகவரி: https://onlineservices.ignou.ac.in/empclive/

ஞான்வாணி என்பது நாட்டின் கல்வி மற்றும் பண்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் வானொலி நிலையங்களின் வலையமைப்பாகும். ஞான்வாணி வானொலி நிலையம் சுமார் 70 கிலோமீட்டர் சுற்றளவுக்குள் ஒலிபரப்பாகிறது மற்றும் அந்தப் பகுதியில் உள்ள கல்வி மற்றும் சமூக வளர்ச்சித் தேவைகளை பூர்த்தி செய்கிறது. இது 105.6 MHz எனும் அதிர்வெணில் கிடைக்கின்றது. இணைய வழி ஒலிபரப்பைக் கேட்க: https://onlineservices.ignou.ac.in/empclive/

ஒலிபரப்புகள் ஆங்கிலம், இந்தி மற்றும் சில பிராந்திய மொழிகளில் வழங்கப்படுகின்றன. ஞான்தர்ஷன் மற்றும் ஞான்வாணி குறித்த நிகழ்ச்சிகளின் விரிவான அட்டவணையை காண, இக்னோவின் இணையதளமான www.ignou.ac.in உள்ள தகுந்த இணைப்புகளை கிளிக் செய்யலாம்.

### 4.5 இருவழி வானொலி ஆலோசனை

இருவழி வானொலி ஆலோசனை மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது, இதன் மூலம் அவர்கள் வல்லுநர்களுடன் தொடர்பு கொள்ளவும், கல்வி தொடர்பான விஷயங்களில் விளக்கம் பெறவும் முடிகிறது. நாட்டின் பல்வேறு வானொலி நிலையங்களிலிருந்து அழைக்கப்பட்ட நிபுணர்களால் ஒரு மணி நேரம் வானொலியில் நேரடி ஆலோசனை நடத்தப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் இருந்து வழங்கப்படும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணைப் பயன்படுத்தி மாணவர்கள் தங்கள் வீடுகளில் இருந்தபடியே கேள்விகளைக் கேட்கலாம்.

### 4.6 ஞான்தாரா

ஞான்தாரா என்பது இக்னோ வழங்கும் இணைய வழி ஆடியோ ஆலோசனை சேவையாகும். மாணவர்கள் தங்களது பாடத்திட்டங்களுடன் தொடர்புடைய தலைப்புகளில் ஆசிரியர்கள் மற்றும் நிபுணர்களுடன் நேரலை விவாதங்களைக் கேட்கலாம். தொலைபேசி மற்றும் மின்னஞ்சல்

வழியாக அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும் முடியும். நேரலை கலந்துரையாடல் இல்லாத நேரங்களில், ஞான்வானி டெல்லி வழங்கும் நிகழ்ச்சிகள் இத்தளத்தில் வழங்கப்படும்.

ஞான்தாரா ஸ்ட்ரீமிங் சேவை உலகமெங்கும் உள்ள இணைய பயனர்களுக்காகத் துல்லியமாக இயங்குகிறது. ஜி.வி. டெல்லி ஒளிபரப்பும் முக்கிய நிகழ்வுகளும், ஞான்தாரா வழியாக அனைத்து ஜி.வி. நிலையங்களாலும் ஒளிபரப்பப்படுகின்றன. https://onlineservices.ignou.ac.in/empclive/ என்ற இணையதள முகவரி மூலம் நீங்கள் ஞான்தாராவை அணுகலாம்.

### 4.7 ஈக்யான்கோஷ்

eGyanKosh என்பது நாட்டில் உள்ள திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட டிஜிட்டல் கல்வி வளங்களை சேமித்தல், அட்டவணைப்படுத்துதல், பாதுகாத்தல், விநியோகித்தல் மற்றும் பகிர்ந்து கொள்வதற்கான தேசிய டிஜிட்டல் களஞ்சியமாகும். eGyanKosh-இல் உள்ள பதிவுகள் பதிப்புரிமையால் பாதுகாக்கப்படுகின்றன, மற்றபடி குறிப்பிடப்படாவிட்டால் அனைத்து உரிமைகளும் இக்னோவால் பாதுகாக்கப்பட்டுள்ளன.

### 4.8 ஸ்வயம் பிரபா

இந்திய அரசின் டி.டி.எச் அலைவரிசையான ஸ்வயம் பிரபாவின் சேனல்களுக்கான தேசிய ஒருங்கிணைப்பாளராக இக்னோ உள்ளது. இக்னோ INFLIBNET, MHRD உடன் ஒருங்கிணைந்து வீடியோக்களை தயாரித்தல், திட்டமிடல் மற்றும் இந்த சேனல்களின் மேலாண்மை ஆகியவற்றிற்காக ஒருங்கிணைத்து வருகிறது.

### 4.9 ஆலோசனை அமர்வுகள்

தொலைதூரக் கல்வியில், கற்றலுக்குத் துணையாகக் கவுன்சிலிங் (ஆலோசனை) அமர்வுகள் மிகவும் முக்கியமான பங்காற்றுகின்றன. இவை மாணவர்களுக்கும் அவர்களின் கல்வி ஆலோசகர்களுக்கும் இடையிலான நேரடி தொடர்பை ஏற்படுத்தும். இத்தகைய தொடர்பின் நோக்கம், உங்களின் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிப்பதோடு மட்டுமல்லாது, மற்ற எந்த தகவல் தொடர்பு வாயில்களிலும் சாத்தியமில்லாத அனுபவத்தை வழங்குவதாகும். மேலும், உங்கள் சக மாணவர்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பையும் இவை வழங்குகின்றன.

நீங்கள் தேர்ந்தெடுத்த பாடப்பிரிவுகளில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கவும், சரியான வழிகாட்டுதலையும் ஆலோசனையையும் வழங்கவும் அனுபவம் வாய்ந்த கல்வி ஆலோசகர்கள் ஒவ்வொரு கல்வி மையத்திலும் செயல்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு பாடத்திட்டத்திற்குமான கலந்தாய்வு அமர்வுகள், கல்விக் காலத்தின் முழுவதும் திட்டமிடப்பட்ட இடைவெளிகளில் நடத்தப்படும்.

கவுன்சிலிங் அமர்வுகளில் பங்கேற்பது கட்டாயமல்ல. இருப்பினும், இவ்வமைப்பின் மூலம் உங்கள் எண்ணங்களை ஆசிரியர்களுடன் மற்றும் சக மாணவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். அதன்மூலம் சில கடினமான கருத்துகள் அல்லது பிரச்சினைகள் தெளிவாக புரிந்துகொள்ளலாம். மேலும், பல சந்தேகங்களுக்கு நேரடி விளக்கங்களைப் பெறும் வாய்ப்பும் உண்டு.

இந்த அமர்வுகள் உங்கள் கல்வி மையத்தில் நேரடி முறையில் நடைபெறலாம் அல்லது ஆன்லைன் வாயிலாகவும் அமையலாம். கவுன்சிலிங் அமர்வுகள் வழக்கமான வகுப்பறை பாடமளிப்பு வேறுபட்டதாக அமையும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஆலோசகர்கள் பாடங்களை நேரடியாக கற்பிக்கமாட்டார்கள்; மாறாக, PGJMC பாடத்திட்டத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் கல்வி மற்றும் தனிப்பட்ட சிக்கல்களைச் சமாளிக்க உதவுவதே அவர்களின் நோக்கமாகும்.

இந்த அமர்வுகளில் பாடம் சார்ந்த சிரமங்களை மட்டும் அல்லாது, அவற்றால் உண்டாகும் பிற பிரச்சினைகளையும் நீங்கள் சுட்டிக்காட்டலாம். எனவே, ஆலோசனை அமர்வுகளுக்கு முன், தயவுசெய்து உங்கள் பாடப்பகுதிகளை வாசித்து, விவாதிக்க வேண்டிய முக்கியமான அம்சங்களை முன்கூட்டியே குறிப்பெடுக்கவும். நீங்கள் பாடப்பிரிவுகளை முழுமையாக புரிந்துகொள்ளவில்லை என்றால், விவாதத்திற்கு போதிய உள்ளடக்கம் இருக்காது. முக்கியமான மற்றும் தொடர்புடைய பிரச்சினைகளில் கவனம் செலுத்த முயற்சிக்கவும்.

கல்வி நோக்கங்களை நிறைவேற்ற, உங்கள் சக மாணவர்களுடன் பரஸ்பர ஆதரவு வழிமுறைகளை உருவாக்கிக் கொள்ளுங்கள். உங்கள் ஆலோசகர்களிடமிருந்து அதிகபட்ச வழிகாட்டுதலைப் பெறுவதற்காகத் தவறாமல் கேள்விகளை தயாரித்து செல்லுங்கள். இவ்வாறான தயார் நிலையில் செல்லும்போது, உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஆலோசனை அமர்வுகளை சிறப்பாகப் பயன்படுத்தலாம்.

இந்த அமர்வுகளுக்கான விரிவான அட்டவணையை, உங்கள் கல்வி மைய ஒருங்கிணைப்பாளர் முன்கூட்டியே உங்களிடம் தெரிவிப்பார். அதன்படி செயல்பட்டு, கற்றலில் நெறிப்படுத்தலையும் உதவியையும் பெறுங்கள்.

### 4.10 கல்வி மையங்கள்

மாணவர்களுக்கு சிறப்பான ஆதரவை வழங்குவதற்காக, நாடு முழுவதும் கல்வி மையங்களை அமைத்துள்ளோம். நீங்கள் வசிக்கும் இடம் அல்லது பணியிடம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்தக் கல்வி மையங்களில் ஒன்று உங்களுக்கு ஒதுக்கப்படும். இருப்பினும், ஒவ்வொரு கல்வி மையமும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்களை மட்டுமே கையாள முடியும், எங்களது சிறந்த முயற்சிகள் இருந்தபோதிலும், நீங்கள் விரும்பும் கல்வி மையத்தை ஒதுக்குவது எப்போதும் சாத்தியமில்லை. நீங்கள் எந்த கல்வி மையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளீர்கள் என்ற விவரங்கள் உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

ஒவ்வொரு கல்வி மையமும் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:

- மையத்தில் பல்வேறு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் ஒருங்கிணைப்பாளர்;
- ஒரு உதவி ஒருங்கிணைப்பாளர் மற்றும் பிற துணை ஊழியர்கள் தனி நேர அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள்; மற்றும்
- பாடத்திட்டத்தில் உங்களுக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்க ஆலோசகர்கள்.

ஒரு கல்வி மையம் பின்வரும் முக்கிய செயல்பாடுகளைக் கொண்டுள்ளது:

பயிற்சி / ஆலோசனை: பயிற்சி / ஆலோசனை திறந்த பல்கலைக்கழக அமைப்பின் ஒரு முக்கிய அம்சமாகும். படிப்புகளுக்கான ஆலோசனைகள் கல்வி மையங்களில் வழங்கப்படும்.

பாடப்பணிகளின் மதிப்பீடு: உங்கள் பாடப்பணிகள் மதிப்பீடு உங்கள் கல்வி மையத்தின் ஆலோசகர்களால் செய்யப்படும்.

நூலகம்: ஒவ்வொரு கல்வி மையத்திலும் பொருத்தமான பாடப் பொருட்கள், அதிகப்படியான வாசிப்புக்கு பரிந்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட புத்தகங்கள் அடங்கிய நூலகம் இருக்கும்.

தகவல் மற்றும் ஆலோசனை: பல்கலைக்கழகம் வழங்கும் படிப்புகள் பற்றிய பொருத்தமான தகவல்கள் உங்களுக்கு வழங்கப்படும்.

சக மாணவர்களுடன் கலந்துரையாடல்: கல்வி மையங்களில் சக மாணவர்களுடன் உரையாடும் வாய்ப்பு கிடைக்கும். இதனால் சுய உதவிக் குழுக்கள் உருவாக வாய்ப்புள்ளது.

## 5.0 மதிப்பீடு

மதிப்பீடு இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது:

1. ஒப்படைப்புகள் மூலம் தொடர்ச்சியான மதிப்பீடு
2. பருவ இறுதித் தேர்வு

இறுதி தேர்வு முடிவில், ஒரு தியரி பாடத்தின் அனைத்து பாடப்பணிகளின் ஒதுக்கீடுகளும் 30% வெயிட்டேஜ் மற்றும் இறுதி ஆண்டு தேர்வுக்கு 70% வெயிட்டேஜ் வழங்கப்படுகிறது. தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் படிப்புகளின் பருவ-இறுதி தேர்வு இரண்டிலும் நீங்கள் குறைந்தபட்சம் 40% பெற வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஆண்டின் பருவ-இறுதித் தேர்வில் தகுதி பெறாத மாணவர்கள் பாடத்திட்த்தின் அதிகபட்ச காலத்திற்குள் அதே பாடத்திட்டத்தில் பருவ-இறுதித் தேர்வுகளை எடுக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

## 5.1 ஒப்படைக்கபடும் பாடப்பணிகள்

பாடப்பணி ஒப்படைப்புகள் என்பது ஒவ்வொரு பாடத்திற்குமான தொடர்ச்சியான மதிப்பீட்டு முறை ஆகும். எனவே, பாடப்பணிகளை முடித்து அவற்றை கல்வி மையங்களில் சமர்ப்பிப்பது கட்டாயம். PGJMC (மாஸ்டர் ஆஃப் ஜர்னலிசம் மற்றும் மக்கள்தொகை தொடர்பியல்) பாடப்பணிகள், பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். ஒவ்வொரு கோட்பாடுசார் பாடத்திற்கும் தனித்தனி ஒப்படைப்புகள் உண்டு.

மாணவர்கள் இந்த பாடப்பணிகளை சரியான நேரத்தில் முடித்து சமர்ப்பிக்க வேண்டும். ஒப்படைப்புகள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில், அந்த பாடத்திற்கான பருவ இறுதித் தேர்வில் (Term-End Exam) கலந்து கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. மேலும், நீங்கள் பருவ இறுதித் தேர்வில் பங்கேற்றாலும், பாடப்பணிகளை சமர்ப்பிக்காதிருந்தால் தேர்வின் முடிவுகள் செல்லுபடியாகாது.

பாடப்பணிகளின் முக்கிய நோக்கம், நீங்கள் சுயபடிப்பு மூலமாக பெற்ற அறிவை மதிப்பீடு செய்வதும், தேவையான நேர்முக கருத்துகளை வழங்குவதும் ஆகும். இந்த பாடப்பணிகளை உருவாக்கும் போது, உங்கள் அனுபவத்தைப் பயன்படுத்தி சிந்தனையை வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பாடப்பணிகளுக்கு பதிலளிக்க, பாடப் புத்தகங்களில் (அச்சு/டிஜிட்டல் வடிவம்) வழங்கப்பட்டுள்ள தகவல்கள் போதுமானவையாக இருக்கின்றன. கூடுதலான வாசிப்பு வசதிகள் இல்லாமை குறித்து கவலைப்பட வேண்டாம். இருப்பினும், நீங்கள் எளிதில் அணுகக்கூடிய பிற மூலங்களும் பயன்படலாம். எவ்வாறாயினும், பதில்கள் சுயமாகவும், சொந்த வார்த்தைகளில் எழுதப்பட்டவையாகவும் இருக்க வேண்டும். புத்தகங்களை நேரடியாக நகலெடுக்கக் கூடாது. ஆனால், நீங்கள் ஏற்கனவே பெற்ற அறிவை புதுமையான முறையில் தொகுத்து வழங்கலாம்.

PGJMC பாடத்திட்டம் 40 கிரெடிட்கள் கொண்டதாக உள்ளது. இதில் மொத்தம் 6 பாடப்பணிகள் இடம்பெறுகின்றன. ஒவ்வொன்றும் ஆசிரியர்-ஆலோசகர்களால் மதிப்பீடு செய்யப்படும். இவற்றில் சில அறிவு சார்ந்தவையாகவும் (theoretical), சில நடைமுறை சார்ந்தவையாகவும் (practical) உள்ளன.

- அறிவு சார்ந்த பாடப்பணிகளில், கட்டுரை வடிவ பதில்கள் எழுத வேண்டும்.

- நடைமுறை சார்ந்த பாடப்பணிகளில், நீங்கள் யூனிட், பிளாக் அல்லது பாடநெறியில் பெற்ற அறிவைப் பயன்படுத்தி பயன்பாட்டு நிலை பதில்கள் வழங்க வேண்டும்.

இருபக்கத்திலும், உங்கள் பதில்கள் தனிப்பட்ட புரிதலை பிரதிபலிக்க வேண்டும். எந்த மூலத்திலிருந்தும் யோசனைகள்

பெறலாம், ஆனால் அவற்றை தங்கள் சொந்த வார்த்தைகளில் மாற்றி, திட்டமிட்ட முறையில் பதிலளிக்க வேண்டும்.

நீங்கள் பாடப்பணிகளில் பணிபுரியும் போது பின்வரும் விதிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்:

- பதில் துல்லியமானதாகவும், நன்கு ஆவணப்படுத்தப்பட்டதாகவும், கேள்விக்கு பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும்.
- பதிலின் வார்த்தை வரம்பை மனதில் கொள்ளுங்கள். நீளத்தில் ஒரு சிறிய மாறுபாடு ஒரு பொருட்டல்ல, ஆனால் உங்கள் பதில் மிகவும் குறுகியதாகவோ அல்லது மிக நீளமாகவோ இருக்கக்கூடாது. சின்னச் சின்ன விஷயங்களை விரிவாக விவாதிப்பதைத் தவிர்க்கவும். சில பாடப்பணிகளுக்கு வார்த்தை வரம்பை அமைப்பதன் மூலம், பரிந்துரைக்கப்பட்ட சொல்-வரம்பிற்குள் நியாயமான போதுமான பதிலை வழங்க முடியும் என்பதை நாங்கள் தெரிவிக்கிறோம்.
- பாடப்பணிகள் இக்னோ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.
- நியமன பதில்கள் எல்லா வகையிலும் முழுமையானதாக இருக்க வேண்டும். சமர்ப்பிக்கும் முன், முழுமையற்ற பதில்கள் மோசமான மதிப்பெண்களைக் கொண்டுவருவதால், அனைத்து பாடப்பணிகளிலும் உள்ள அனைத்து கேள்விகளுக்கும் நீங்கள் பதிலளித்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- பாடப்பணிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின்படி உங்கள் பாடப்பணிகளை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும். உரிய தேதிக்குப் பிறகு பெறப்பட்ட பாடப்பணிகளை நிராகரிக்க பல்கலைக்கழகம் / கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளருக்கு உரிமை உண்டு.
- உங்கள் சொந்த பதிவுக்காக, உங்கள் கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளரிடம் நீங்கள் சமர்ப்பிக்கும் ஒப்படைப்புகளுக்கான அனைத்து பதில்களின் நகலையும் வைத்திருங்கள்.
- மதிப்பீட்டிற்குப் பிறகு நீங்கள் பெற்ற ஒப்படைப்புகளுக்கு திருத்தப்பட்ட அனைத்து பதில்களின் கணக்கையும் பராமரிக்கவும். எதிர்காலத்தில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொள்ள இது உங்களுக்கு உதவும்.
- உங்கள் பாடப்பணிகளை சமர்ப்பிக்க முடியாவிட்டால் அல்லது குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களை 40% பெற முடியாவிட்டால், அடுத்த தொகுதி மாணவர்களுக்கான பாடப்பணிகளை நீங்கள் சேகரிக்க / பதிவிறக்கம் செய்து, முயற்சி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.
- உங்கள் ஒப்படைப்புகளின் ஒப்படைப்புத் தாளில் குறிப்பிடப்பட்ட மதிப்பெண் உங்கள் கிரேடு அட்டையில் சரியாக பிரதிபலிக்கப்படவில்லை என்று நீங்கள் கண்டால், உங்கள் கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொண்டு, சரியான அங்கீகரிக்கப்பட்ட விருதுப் பட்டியலை (அந்தந்த மண்டல மையம்

மூலம்) இக்னோவின் பதிவாளர், மாணவர் மதிப்பீட்டுப் பிரிவு, இக்னோவுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளலாம்.

- ஒரு அசைன்மெண்டில் பாஸ் மார்க்ஸ்/கிரேடு பெற்றுவிட்டால், மதிப்பெண்கள்/கிரேடு உயர்வுக்காக அதை மீண்டும் சமர்ப்பிக்க முடியாது. உண்மைப் பிழைகள் ஏதேனும் இருந்தால் தவிர, ஒதுக்கீடுகள் மறு மதிப்பீட்டிற்கு உட்பட்டவை அல்ல. மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகளில் நீங்கள் கவனித்த முரண்பாடு உங்கள் கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும்.
- பாடப்பணிகளுடன், ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், அவற்றை தெளிவுபடுத்துவதற்காக பாடப்பணிகளுடன் இணைக்க வேண்டாம்.

பாடப்பணிகளுக்கான குறிப்பிட்ட அறிவுறுத்தல்

- உங்கள் பதில் தாளின் முதல் பக்கத்தின் வலது மூலையின் மேல் பகுதியில் உங்கள் பதிவு எண், பெயர், முழு முகவரி, கையொப்பம் மற்றும் தேதியை எழுதுங்கள்.
- உங்கள் பதில் தாளின் முதல் பக்கத்தின் இடது பக்கத்தில் பாடத் தலைப்பு, பாடநெறி குறியீடு, பாடநெறி தலைப்பு, பாடப்பணிக் குறியீடு மற்றும் உங்கள் கல்வி மையத்தின் பெயர் ஆகியவற்றை எழுதுங்கள். பாடநெறி குறியீடு மற்றும் பாடப்பணிக் குறியீடு ஆகியவற்றை பாடப்பணிகளிலிருந்து மீண்டும் உருவாக்கலாம்.
- ஒவ்வொரு பாடப்பணிக்கும் உங்கள் பதில் தாளின் முதல் பக்கத்தின் மேல் பகுதி பின்வருமாறு இருக்க வேண்டும்:

| | |
|---|---|
| PROGRAMMETITLE.......................... | ENROLMENTNO.............. |
| PROGRAMMECODE.......................... | |
| NAME.................................. | ADDRESS........................... |
| | ... |
| | ............................................ |
| | ... |
| | ............................................ |
| | .. |
| COURSECODE................................... | |
| COURSETITLE................................... | |
| ASSGINMENTCODE.......................... | |
| SIGNATURE.......................... | |
| STUDYCENTRE................................. | |
| DATE....................................... | |

- பாடப்பணி ஒப்படைப்புகளை கவனமாகப் படித்து, கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றவும்.
- பாடப்பிரிவுகளைப் படித்து, கேள்வி தொடர்பான குறிப்புகளைக் குறித்துக் கொண்டு, அந்த குறிப்புகளை தர்க்கரீதியான வரிசையில்

மறுசீரமைத்து, உங்கள் பதிலுக்கு ஒரு தோராயமான குறிப்புகளை உருவாக்குங்கள். முன்னுரைக்கும் முடிவுரைக்கும் போதிய கவனம் கொடுங்கள். அறிமுகத்தில், கேள்வியின் சுருக்கமான விளக்கத்தையும், பதிலை எவ்வாறு உருவாக்க உத்தேசித்துள்ளீர்கள் என்பதையும் கொடுக்க வேண்டும். முடிவுரை கேள்விக்கான உங்கள் பதிலை சுருக்கமாக இருக்க வேண்டும். பதில் தர்க்கரீதியாகவும் ஒத்திசைவாகவும் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். பதிலை பொருத்தமான பத்திகளாக பிரிக்க வேண்டும். அசைன்மெண்டில் கொடுக்கப்பட்ட கேள்விக்கு பொருத்தமான பதில் இருக்க வேண்டும். கேள்வியின் அனைத்து முக்கிய புள்ளிகளையும் நீங்கள் முயற்சித்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் பதிலில் நீங்கள் திருப்தியடைந்தவுடன், இறுதி பதிப்பை நேர்த்தியாக எழுதி, நீங்கள் வலியுறுத்த விரும்பும் குறிப்புகளை அடிக்கோடிடவும்.

- உங்கள் பதிலுக்கு A- 4 அளவு காகிதத்தை மட்டுமே பயன்படுத்தவும், அனைத்து பக்கங்களையும் கவனமாக கட்டவும். மெல்லிய காகிதத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். இடது பக்கத்தில் 4 செ.மீ விளிம்பையும், ஒவ்வொரு பதிலுக்கும் இடையில் குறைந்தது சில கோடுகளையும் அனுமதிக்கவும். இதன் மூலம் மதிப்பீட்டாளர் தகுந்த இடங்களில் பயனுள்ள கருத்துரைகளை ஓரங்களில் எழுத முடியும்.
- பாடப்பணி ஒப்படைப்புகளுக்கான பதில்களை உங்கள் கையெழுத்தில் எழுதுங்கள். பதில்களை அச்சிடவோ அல்லது தட்டச்சு செய்யவோ வேண்டாம்.
- மற்ற மாணவர்களின் பதில் தாளில் இருந்து நகலெடுக்க வேண்டாம். நகல் எடுப்பது கவனிக்கப்பட்டால், அத்தகைய மாணவரின் பாடப்பணி நிராகரிக்கப்படும்.
- ஒவ்வொரு பாடப்பணிக்கும் தனித்தனி காகிதங்களில் பதில் எழுதப்பட வேண்டும்.
- பதில் எழுதுவதற்கு முன் கேள்வி எண் மற்றும் கேள்வியை எழுதவும்.
- பூர்த்தி செய்யப்பட்ட பாடப்பணி உங்களுக்கு ஒதுக்கப்பட்ட கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளருக்கு மட்டுமே அனுப்பப்பட வேண்டும். **SED**, இக்னோ, புது தில்லிக்கு அனுப்ப வேண்டாம்.
- கல்வி மையத்தில் பாடப்பணியை ஒப்படைப்பை சமர்ப்பித்த பிறகு, பரிந்துரைக்கப்பட்ட பாடப்பணி அனுப்புதல் மற்றும் ஒப்புகை அட்டையில் ஒருங்கிணைப்பாளரிடமிருந்து ஒப்புதலைப் பெறுங்கள்.
- நீங்கள் கல்வி மையத்தை மாற்றக் கோரியிருந்தால், பல்கலைக்கழகத்தால் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட அசல் கல்வி மையத்திற்கு மட்டுமே உங்கள் பாடப்பணிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

## 5.2 பருவ இறுதித் தேர்வு

முன்னர் கூறியது போல, பருவ இறுதித் தேர்வு என்பது மதிப்பீட்டு முறையின் மற்றொரு அங்கமாகும். பருவ-இறுதித் தேர்வு (TEE) இறுதி

முடிவில் 70% எடையைக் கொண்டுள்ளது (30% வெயிட்டேஜ் பாடப்பணிகளுக்கானது).

பருவகால இறுதித் தேர்வுகள் ஆண்டுக்கு இரண்டு முறை (ஜூன் மற்றும் டிசம்பர்) நடத்தப்படுகின்றன. ஓராண்டு படித்த பிறகு பருவ இறுதித் தேர்வை எழுதலாம். பாடப்பணி ஒப்படைப்புகளை பாடத்திட்டங்கள் ஆறு மாதங்கள் முடிந்த பிறகு மற்றும் ஒரு வருடத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படலாம்.

தேர்வு நடைபெறும் தேதிகள் மற்றும் இடம் இக்னோ இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும்.

பருவ-இறுதித் தேர்வில் தோன்றுவதற்கு தகுதி பெற, நீங்கள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்:

1. தேவையான அனைத்து பாடப்பணிகளும் உரிய தேதிகளுக்குள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்க வேண்டும்
2. கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்டு இருக்க வேண்டும்
3. பரீட்சை படிவம் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்க வேண்டும்

ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரத்தைக் குறிக்கும் தேர்வு தேதி அட்டவணை இக்னோ பல்கலைக்கழக இணையதளத்தில் www.ignou.ac.in முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ளது. தேர்வு எழுத இக்னோ இணையதளத்தில் இருந்து தேர்வு நுழைவுச்சீட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளவும்.

எந்தவொரு பாடநெறியிலும் பரீட்சை எழுதுவதற்கு நீங்கள் பரீட்சை படிவத்தை சமர்ப்பிக்க வேண்டியது முன்நிபந்தனையாகும். தேர்வு படிவம் ஆன்லைனில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆன்லைன் மூலம் தேர்வு படிவத்தை சமர்ப்பிப்பதற்கான இணைப்பு பல்கலைக்கழக இணையதளத்தில் கிடைக்கும்.

தேர்வு படிவத்தை சமர்ப்பிப்பதற்கான அட்டவணை இக்னோ இணையதளத்தில் கிடைக்கிறது. தேர்வு படிவத்தை சமர்ப்பித்தவுடன் கட்டுப்பாட்டு எண் வழங்கப்படும். தேர்வு தொடங்குவதற்கு ஏழு நாட்களுக்கு முன்பு ஹால் டிக்கெட் இக்னோ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். பரீட்சை எழுதுவதற்கு பல்கலைக்கழக அடையாள அட்டை மற்றும் ஹால் டிக்கெட் தேவையாகும்.

நீங்கள் ஒரு குறிப்பிட்ட பாடநெறிக்கு பதிவுசெய்துள்ளீர்களா என்பதையும் அந்தப் பரீட்சைக்கு நீங்கள் தகுதியை பெற்றுள்ளீர்களா இல்லையா என்பதையும் சரிபார்ப்பது உங்கள் பொறுப்பாகும். இதை அலட்சியப்படுத்தி, தகுதி பெறாமல் தேர்வு எழுதினால், தேர்வு முடிவு ரத்து செய்யப்படும்.

மண்டல மையம் மற்றும் கல்வி மையம் உங்களுக்கான தொடர்பு புள்ளியாகும். பல்கலைக்கழகம் அனைத்து மாணவர்களுக்கும் தனித்தனியாக தகவலை அனுப்ப முடியாது. அனைத்து முக்கிய செய்திகளும் கல்வி மையங்களின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும்

மண்டல இயக்குநர்களுக்கு அனுப்பப்பட்டு பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

அனைத்து மாணவர்களின் நலனுக்காக ஒருங்கிணைப்பாளர் அத்தகைய முக்கியமான சுற்றறிக்கைகள் / அறிவிப்புகளின் நகலை கல்வி மையத்தின் அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்துவார். எனவே, உங்கள் ஒருங்கிணைப்பாளர் மற்றும் இக்னோ வலைத்தளத்துடன் தொடர்பில் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள், இதனால் பாடப்பணிகள் பற்றிய தகவல்கள், தேர்வு படிவங்களை சமர்ப்பித்தல், தேதி தாள் ஆகியவை பற்றிய தகவல்களை முன்கூட்டியே பெறுவீர்கள்.

தேர்வு தொடர்பாக பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொள்ளும்போது, பாடத்திட்டத்தின் பெயர், பதிவு எண் மற்றும் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும். அத்தகைய விவரங்கள் இல்லாத நிலையில், உங்கள் பிரச்சினை கவனிக்கப்படாமல் போகலாம். ஒரு குறிப்பிட்ட பருவ இறுதி தேர்வின் முடிவை அறிவிக்க பல்கலைக்கழகத்திற்கு பொதுவாக 45 நாட்கள் தேவைப்படலாம். தேர்வு முடிவுகளை நீங்கள் பெற்றுவிட்டால், அந்தப் படிப்பில் நீங்கள் தேர்ச்சி பெற்றிருப்பதைக் கண்டால், நீங்கள் மீண்டும் அந்தப் படிப்பை எழுதத் தேவையில்லை.

மாணவர்கள் ஒரு நேரத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட படிப்பை எழுதலாம். முதல் முயற்சியிலேயே அனைத்து தியரி பாடங்களிலும் தேர்ச்சி பெற முடியாவிட்டால் அல்லது ஒரே நேரத்தில் அனைத்து பாடங்களிலும் தேர்வு எழுத விரும்பவில்லை என்றால், அடுத்தடுத்த தேர்வுகளில் அவற்றை நீங்கள் தேர்ச்சி பெறலாம். இருப்பினும், நீங்கள் அனுமதிக்கப்பட்ட ஆண்டுகளுக்குள் அனைத்து படிப்புகளிலும் தேர்ச்சி பெற வேண்டும்.

பருவ இறுதித் தேர்வின் மறு மதிப்பீடு:

தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு, வழங்கப்பட்ட மதிப்பெண்களில் மாணவர்கள் திருப்தி அடையவில்லை என்றால், ஒரு பாடத்திற்கு ரூ.750/- செலுத்தி விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்யுமாறு பல்கலைக்கழகத்தை கோரலாம் (கட்டணத்தை பல்கலைக்கழகம் திருத்தியமைக்கலாம்). தேர்வு முடிவுகள் வெளியான நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் மறுமதிப்பீட்டு இணையதளத்தில் மாணவர் மறுமதிப்பீட்டிற்கான கோரிக்கையை ஆன்லைனில் சமர்ப்பிக்க வேண்டும்.

விடைத்தாள் நகல் பெறுதல்:

தேர்வு முடிவுகள் வெளியான பிறகு, வழங்கப்பட்ட மதிப்பெண்களில் மாணவர்கள் திருப்தி அடையவில்லை என்றால், விடைத்தாள்களின் நகலை ரூ.100/- செலுத்தி பல்கலைக்கழகத்திடம் கோரலாம் (கட்டணம் பல்கலைக்கழகத்தால் திருத்தியமைக்கப்படலாம்). தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் மறுமதிப்பீட்டு இணையதளத்தில் விடைத்தாள் நகல் பெறுவதற்கான கோரிக்கையை மறுமதிப்பீட்டு இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மதிப்பெண் அட்டையின் நகல் அறிக்கை:

இக்னோ பல்கலைகழகத்திற்கு ரூ.200/- (கட்டணத்தை பல்கலைக்கழகம் திருத்தியமைக்கலாம்) செலுத்தி நகல் மதிப்பெண் அறிக்கை அட்டையைப் பெற இக்னோ பல்கலைக்கழகத்தின் பெயரில் புதுதில்லியில் செலுத்த வேண்டும். இதற்கான படிவம் பல்கலைகழக இணையத்தில் உள்ளது.

## 6.0 பிற பயனுள்ள தகவல்கள்

பின்வரும் தகவல்கள் நிகழ்ச்சிக்கு பயனுள்ளதாக இருக்கும்.

### 6.1 இட ஒதுக்கீடு

இப்பல்கலைக்கழகம் மைய அரசு விதிகளின்படி இடங்களை ஒதுக்கீடு செய்கிறது.

### 6.2 கல்வி உதவித் தொகைகள்

கல்வி உதவித்தொகை தொடர்பான தகவல்களுக்கு மாணவர்கள் பொதுவான தகவலறிக்கையைப் பார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

### 6.3 மாணவர் இணையத்தில் உங்கள் கணக்கு

உங்கள் சேர்க்கை உறுதிசெய்யப்பட்டதும், தயவுசெய்து https://ignou.samarth.edu.in இணையத்தை பார்வையிடவும், புதிய பதிவு என்பதைக் கிளிக் செய்து, உங்கள் சொந்த மாணவர் கணக்கை உருவாக்கவும். உங்கள் கணக்கைப் பதிவுசெய்த பிறகு, பல்கலைக்கழகம் வழங்கும் பல்வேறு சேவைகளை ஒரே இடத்தில் நீங்கள் பெற முடியும். உங்கள் மாணவர் அடையாள அட்டையையும் இந்த இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

### 6.4 முகவரி / கல்வி மையம் / மண்டல மையத்தை மாற்றுதல் அல்லது திருத்துதல்

முகவரி மாற்றம்/திருத்தம், கல்வி மைய மாற்றம் அல்லது மண்டல மையத்தை மாற்றுவதற்கான உங்கள் கோரிக்கையை உங்கள் மாணவர் கணக்கு மூலம் சமர்ப்பிக்கலாம். இந்த செயல்முறை முற்றிலும் காகிதமற்றது, மேலும் பல்கலைக்கழகத்தின் எந்த அலுவலகத்திற்கும் செல்லாமல் உங்கள் கோரிக்கையை சமர்ப்பிக்கலாம்.

### 6.5 சில பயனுள்ள குறிப்புகள்

1. பாடத்திட்ட வழிகாட்டியை முழுமையாகப் படித்து தயாராக வைத்திருங்கள். PGJMC பாடத்திட்டத்தை நீங்கள் படிக்கும் போது உங்களுக்குத் தேவையான பெரும்பாலான தகவல்கள் இதில் உள்ளன.
2. பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட மற்றும் அனுப்பப்பட்ட அனைத்து தகவல்கள்/கடிதங்கள்/தகவல்தொடர்புகளின் பதிவை தயவுசெய்து வைத்திருங்கள்.
3. பட்டப்படிப்பு தொடரும் போது நீங்கள் ஏதேனும் சிக்கலை எதிர்கொண்டால் எங்களுக்கு எழுதுங்கள். உங்கள் பிரச்சினையை விரைவாகத் தீர்க்க சுருக்கமாகவும் நேர்த்தியாகவும் எழுதுங்கள்.

4. முகவரி மாற்றம் ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்கவும்.
5. பட்டப்படிப்பில் இருந்து சிறந்ததைப் பெற, உங்களுக்காக ஒரு கால அட்டவணையைப் பராமரித்து அதில் முடிந்த அளவு தொடரவும். உடல்நலம், அலுவலக வேலை, சமூகக் கடமைகள் போன்ற சில எதிர்பாராத சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நேர அட்டவணையை யதார்த்தமானதாக மாற்றுங்கள்.
6. உங்கள் வேலையில் வழக்கமாக இருங்கள் மற்றும் ஒவ்வொரு நாளும் குறைந்தது இரண்டு மணிநேர படிப்பை ஒதுக்குங்கள்.

### 6.6 உங்கள் பயன்பாட்டிற்கான சில அத்தியாவசிய படிவங்கள்

சம்பந்தப்பட்ட படிவங்களை தரவிறக்கம் செய்வதற்கு பயனுள்ள சில முக்கியமான இணைப்புகளை இந்த பிரிவில் நாங்கள் வழங்குகிறோம். பல்வேறு சேவைகளுக்கான படிவத்தை நிரப்பும்போது, வழிமுறைகளை கவனமாக படிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

1. புதிய சேர்க்கை, பருவ இறுதித் தேர்வு, மறு மதிப்பீடு, பட்டம் / டிப்ளோமா (பட்டமளிப்பு), மற்றும் முன்னாள் மாணவர் பதிவு - ஆன்லைன் சமர்ப்பிப்பு (IGNOU இணையதளத்தைப் பார்வையிடவும் http://www.ignou.ac.in/ → ஆன்லைனில் பதிவு செய்யவும்)

2. வேறு பல சேவைகள் மற்றும் சிக்கல்களுக்கு காமன் பிராஸ்பெக்டஸை கவனமாக படிக்கவும். டிஜிட்டல் காமன் ப்ராஸ்பெக்டஸ் இக்னோ இணையதளத்தில் கிடைக்கிறது (http://www.ignou.ac.in/)

### 6.7 எதற்காக யாரை தொடர்பு கொள்வது?

1. அடையாள அட்டை, கட்டண ரசீது, முகவரி மாற்றம், போனபைட் சான்றிதழ்கள், புலப்பெயர்ச்சி சான்றிதழ், கல்வி உதவித்தொகை படிவங்கள், ஆய்வுப் பொருட்கள் கிடைக்கப்பெறாமை ஆகியவற்றிற்கு சம்பந்தப்பட்ட மண்டல மையத்தை தொடர்பு கொள்ளலாம்.
2. பாடப்பணிகளுக்கு, இக்னோ இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்: www.ignou.ac.in. அல்லது இணைப்பிற்குச் செல்லவும் https://webservices.ignou.ac.in/assignments/
3. உங்கள் கிரேடு கார்டில் ஒப்படைப்பு கிரேடுகள் / மதிப்பெண்களைப் பிரதிபலிக்காததற்கு, சம்பந்தப்பட்ட மண்டல மையத்தின் மண்டல இயக்குநர் மற்றும் உதவி பதிவாளர் (பாடப்பணிகள்), மாணவர் மதிப்பீட்டு பிரிவு (SED), பிளாக் -3, அறை எண் 7, இக்னோ, மைதான் கர்ஹி, புது தில்லி -110068, மின்னஞ்சல்: assignments@ignou.ac.in
4. தேர்வுகள், தேதித்தாள்கள், ஹால் டிக்கெட் தொடர்பான சந்தேகங்களுக்கு, ஏ.ஆர்., தேர்வு-2 ஐ தொடர்பு கொள்ளவும்.
5. முடிவுக்கு, முடிவுகளை முன்கூட்டியே அறிவித்தல், மறு மதிப்பீடு, டிரான்ஸ்கிரிப்டுகள், தர அட்டை, தற்காலிக சான்றிதழ் நீங்கள் துணை பதிவாளர் (தேர்வு-III), SED, பிளாக் 12, அறை எண் 1, இக்னோ, மைதான் கர்ஹி, புது தில்லி -110068

6. அசல் டிப்ளமோ / டிப்ளமோ, பட்டமளிப்பு விழாவின் சரிபார்ப்புக்கு, AR (Exam-I) SED, IGNOU, Block-9, Maidan Garhi, New Delhi-110068 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
7. மாணவர் குறைகளுக்கு ஒரு ஆன்லைன் போர்ட்டல் உள்ளது, அங்கு நீங்கள் உங்கள் கவலையை தெரிவிக்கலாம் (இணைப்பு: http://igram.ignou.ac.in/) அல்லது மாணவர் குறைதீர்ப்பு செல், SED, பிளாக் 6, அறை எண் 14, இக்னோ, மைதான் கர்ஹி, புது தில்லி -110068
8. ஆலோசனை அட்டவணைகள், நியமன பதில்கள் பற்றிய கருத்துக்களுக்கு சம்பந்தப்பட்ட பாடத்திட் கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் / பாடத்திட் பொறுப்பாளரை தொடர்பு கொள்ளவும்.

### 6.8 PGJMC Programme க்காக செயல்படுத்தப்பட்ட RC கள் மற்றும் LSC களின் பட்டியல்

மாணவர் சேர்க்கை முற்றிலும் ஆன்லைனில் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. இந்த பாடத்திட்டத்திற்கான ஆன்லைன் சேர்க்கை படிவத்தை நீங்கள் பூர்த்தி செய்யும்போது, அங்கேயே மண்டல மையங்களின் பெயர்களைப் பெறுவீர்கள். விருப்பமான மண்டல மையத்தைத் தேர்ந்தெடுத்த பிறகு, அந்தக் குறிப்பிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டல மையத்தின் கீழ் இந்தத் பாடத்திட்த்திற்காக செயல்படுத்தப்பட்ட கல்வி மையங்களின் பெயர்களை நீங்கள் காண்பீர்கள். முகவரி, தொடர்பு விவரங்கள் மற்றும் கல்வி மையங்கள் பற்றிய பிற தகவல்களை அந்தந்த மண்டல மையங்களின் வலைத்தளங்களிலிருந்து பெறலாம்.